

# வாரந்தோறும் ஒரு தீபம்!

**உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!**
**(சங்கீதம் 119:105)**

**(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)**

**வியாழன்தோறும்**

| 10.07.2025 | 28. 'தேவன் தந்தருளிய அரவணைப்பை' என் தந்தை மூலம் கண்டேன்! |
|---|---|




**எ**ன் தலைமுடியை என் தாயார் கோருவதற்கு பதிலாய், ஒரு வேலைக்கார பெண்ணிடம் அந்த பொறுப்பை கொடுத்து விட்டார். அந்தப் பெண்ணோ, தலை சீவும் அந்த நேரத்தில், என்னை வன்மையாக அடிப்பாள். நான் பதிலுக்கு அடிக்காவிட்டாலும், எனக்குள் ஆத்திரமும் கோபமும் மூண்டது, "ஓ என் தேவனே, நான் உம்மிடம் ஓடோடி வருவதற்கு பதிலாக, ஆத்திரமான கோபங்கள் என் மனதை கசந்து போகச் செய்கிறதே!" என தேம்பி அழுதேன்.

என் தந்தையோ, என் மீது அளவு கடந்த பாசம் வைத்திருந்தார்கள். ஆகவே என் நிலைமையை கூறி என் அன்பு தந்தையை நான் நோகடிக்க விரும்பவில்லை. என் தாயோ, என்னை பரிகசித்து ஏராளமான புகார்களை என் தந்தையிடம் அடிக்கடி கூறினார். அவ்வித புகார்களுக்கு என் தந்தை வேறு ஏதும் பதில் கூறாமல், ஆண்டவர் இயேசு கூறிய "பகலுக்கு பன்னிரெண்டு மணி நேரம் இல்லையோ.... சின்னபிள்ளைதானே, போகப் போக ஞானமுள்ள பிள்ளையாய் வளருவாள்"என்ற பதிலை கூறி, பாதிக்கப்பட்ட என் மனநிலையைத் தேற்றினார்!

*– (மேடம் குயான் வாழ்க்கை தீபங்கள்)*